## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை-18

அனுப்புநர்
திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர்,
பள்ளிக் கல்வி இயக்குனரகம்,
17, கல்லூரி சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 008.

ந.க.எண் 134/2023/கூதே.3 நாள் : 25.01.2023

ஐயா,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – தேர்தல் நடவடிக்கைகளுக்கு பள்ளிக் கட்டிடங்கள் (School Buildings) பயன்படுத்துதல் தொடர்பாக.

*****

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 33 – ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு தனியான சட்டபூர்வ அமைப்பாகும் (Independent Statutory Body).

1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண் 52 A (9) ன் கீழ் இத்தேர்தல்களை நடத்த ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஆணையம் அவசியமென கருதப்படும் இனங்களில் பொதுவான அல்லது சிறப்புக் கட்டளைகள் வழங்கலாம் என்றுள்ளது.

தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 15 இதர அரசு துறைத் தலைவர்களின் நிர்வாகக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட (Administrative Control) 23,149 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

இச்சங்கங்களின் 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடையும் சங்கங்கள் மற்றும் இதர வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டிய சுமார் 7005 சங்கங்களுக்கான தேர்தலை மார்ச் 3-வது வாரம் 2023 முதல் பல்வேறு கட்டங்களாக (Phases and Stages) ஆணையம் நடத்த வேண்டியுள்ளது. இதற்கான தேர்தல் திட்டம் ஆணையம் விரைவில் அறிவிக்க உள்ளது.

தேர்தல் திட்டம் அறிவிக்கப்பட்ட சங்கங்களில் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை (Polling and Counting) நடவடிக்கை அனைத்து வாக்காளர்களும் வரக்கூடிய ஒரு பொது இடத்தில் (Public place) நடத்தப்பட வேண்டும் என்று சட்டத்தில் கட்டளை இடப்பட்டுள்ளது. எனவே **போதுமான இடம் இல்லாத சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு** தேவைப்படும் நேர்வுகளில் பள்ளிக் கட்டிடங்களில் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள ஆணையம் உத்தேசித்துள்ளது. சென்ற 2013 மற்றும் 2018 கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டு மொத்தத் தேர்தலின் போது இந்த நடைமுறையினையே ஆணையம் மேற்கொண்டது என்பதையும் இத்தருணத்தில் ஆணையம் தெரிவிக்க விரும்புகிறது.

எனவே விரைவில் நடக்க இருக்கும் 2023 கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு குறிப்பாக (வாக்குப்பதிவு, வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தல்) ஆகிய இரண்டு நாட்களுக்கு தேவைப்படும் இனங்களில், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர்களின் (District Election Officers) கோரிக்கையின் பேரில் பள்ளிக் கட்டிடங்களைப் பயன்படுத்த உரிய அனுமதி அளித்திட அதற்கான மாவட்ட அளவிலான கல்வி அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கிடவும் அதன் விபரத்தை ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

25/1/23

ஆணையருக்காக

25/1/23

நகல் :

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளி கல்வித்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 9.
2. அனைத்து மாநில தேர்தல் அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4. கணினி ஆளுமையாளர்.
5. இருப்பு கோப்பு – 2023.